நிதி உதவி நிறுவனங்களும், கடன் வழங்கு நிறுவனங்களும் இப்பதிவேட்டின் அடிப்படையில் கடன் வழங்குவது எளிதாகிறது. விற்பனை, கொடை, அடமானம், சொத்துப் பரிமாற்றம் மூலமாக நில உரிமை மாற்றம் பதிவு செய்ய வேண்டுமானால், விற்பவர்களும் வாங்குபவர்களும் தங்களுடைய நில உரிமைப் பதிவேட்டை பதிவுத் துறை அலுவலகத்தில் கொடுத்தால்தான் நில உரிமை மாற்றம் பதிவு செய்வார்கள்;ரிஜிஸ்டர் செய்வார்கள். நில உரிமைப் பதிவேடு வருவாய் நிர்வாகத்துக்கு ஒரு வலுவுள்ள கருவியாக அமைகிறது. அதேபோல நில உரிமையாளர்களுக்கு நில உரிமைப் பதிவேடு நிலத்தைப்பற்றிய எல்லா விவரங்களையும் கொண்டுள்ள சட்ட ரீதியான ஒரு கணிப்பொறி, கம்பியூட்டர் மாதிரி அமைகிறது. வங்கிகளில் கணக்கு வைத்து இருப்பவர்களுக்கு வங்கிகள் வழங்கும் பாஸ் புத்தகம் எவ்வாறு பயன் அளிக்கிறதோ அதைவிட அதிகப் பயனை நில உரிமையாளர்களுக்கு நில உரிமைப் பதிவேடு அளிக்கிறது.

பிற்பகல் 12.10

இந்தப் பதிவேட்டினால், நில உரிமையாளர்கள் வேறு துறையின் உதவியை நாட வேண்டிய அவசியம் தவிர்க்கப்படுகிறது. நில உரிமையாளர்களுக்குத் தேவைப்படும் அனைத்து விவரங்களும் இந்த ஒரு பதிவேட்டிலேயே அமைந்துவிடுவதால் இது ஒரு சீரிய திட்டமாகும். பொது மக்கள் இந்த சீரிய திட்டத்தின் சிறப்புகளை நன்கு உணர்ந்து தேவையான பயன்களை அடைவார்கள் என்று இந்த அரசு நம்புகிறது.

5. கவன ஈர்ப்பு

(அ) தண்ணீர் இல்லாது இருக்கும் சங்கராபுரம் வட்டத்தை வறட்சிப் பகுதியாக அறிவிக்க வேண்டிய அவசியம் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. சி. இராமசுவாமி அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. சி. இராமசுவாமி.

திரு. சி. இராமசுவாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சங்கராபுரம் வட்டத்தில் தண்ணீர் இல்லாமல் பயிர்கள் நெல், கரும்பு, மணிலா காய்ந்து போய் விவசாயிகள் அவதிப்படுவது, மேற்படி பகுதியை வறட்சிப் பகுதியாக அறிவிப்பது குறித்து" மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

1996 மார்ச் 1]

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 55-ன்கீழ், விழுப்புரம்-இராமசாமி படையாட்சியார் மாவட்டத்திலுள்ள சங்கராபுரம் வட்டம் பிரிவினையின்போது கள்ளக்குறிச்சி வட்டத்திலேயிருந்து பிரிந்து புதிதாக உருவாக்கப்பட்டதாகும். இதிலுள்ள வருவாய்க் கிராமங்கள்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதுபற்றிய அறிக்கை பேரவையில் வைக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் போதும்.

மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி: வைக்கவில்லை. It is not placed.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: அவர்கள் இந்த வட்டத்தையும் வறட்சி வட்டமாக அறிவிக்க வேண்டும் என்றுதான் கேட்டு இருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதுபற்றிய அறிக்கை ஒன்று நீங்கள் கொடுத்து இருக்கிறீர்கள். அது பேரவையில் வைக்கப்பட்டுள்ளது என்று நீங்கள் சொன்னதற்குப் பிறகு உறுப்பினர் கேள்வி கேட்பார். அப்போது நீங்கள் பதில் சொல்லுங்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்:

அறிக்கை

விழுப்புரம்-இராமசாமி படையாட்சியார் மாவட்டத்திலுள்ள சங்கராபுரம் வட்டம் 30-9-1993 அன்று மாவட்டப் பிரிவினையின்போது கள்ளக்குறிச்சி வட்டத்திலிருந்து பிரிந்து புதிதாக உருவாக்கப்பட்ட வட்டமாகும். இதில் 120 வருவாய்க் கிராமங்கள் அடங்கியுள்ளன. உள் வட்டங்களின் எண்ணிக்கை 5 ஆகும். மொத்த ஜனத்தொகை 2,31,520, வேளாண் தொழிலாளர்களின் எண்ணிக்கை 31,382. சங்கராபுரம் வட்டம் வடகிழக்குப் பருவ மழையை மட்டுமே அதிகம் சார்ந்துள்ளது. இந்த வட்டத்தில் இயல்பாக ஒரு ஆண்டில் பெய்ய வேண்டிய சராசரி மழையளவு 902 மி.மீ. ஆனால் இந்த ஆண்டு 509 மி.மீ மழை மட்டுமே பெய்துள்ளது. இது 56 சதவீதமாகும். வடகிழக்குப் பருவ மழை இயல்பாகப் பெய்ய வேண்டியஅளவு 374 மி.மீ. இதுவரை வடகிழக்குப் பருவ மழை 168 மி.மீ அளவே பெய்யப்பட்டு உள்ளது. வடகிடக்குப் பருவமழை

[திரு. எஸ்.டி. சோமசுந்தரம்] [1996 மார்ச் 1

வாயிலாக இவ்வட்டத்திலுள்ள 26 பொதுப்பணித் துறை ஏரிகளும், 149 சிறுபாசன ஏரிகளும் நீர் பெறவேண்டும். ஆனால் வடகிழக்குப் பருவமழை பொய்த்ததின் காரணமாக பாசன ஏரிகளில் போதிய நீர் வரத்து கிடைக்கப்பெறவில்லை.

வடகிழக்குப் பருவமழை கிடைக்கும் என்ற நம்பிக்கையில் இவ்வட்டத்தில் நெல், மணிலா, கரும்பு, பருத்தி ஆகிய பயிர்கள் பயிரிடப்பட்டுள்ளன. வழக்கமாக இவ்வட்டத்தில் 29,300 ஹெக்டேர் நீர்பாய்ச்சப்பட்ட பயிராகவும், 28,400 ஹெக்டேர் மானாவாரி பயிராகவும் சாகுபடி செய்யப்படும். இதில் இதுவரை இறவைப் பயிரில் 28,851 ஹெக்டேர், மானாவாரி பயிரில் 28,321 ஹெக்டேர் வடகிழக்குப் பருவமழையை நம்பி சாகுபடிக்கு கொண்டு வரப்பட்டது. 550. ஹெக்டேர் பரப்பு தரிசாக விடப்பட்டுள்ளது. நெற்பயிரில் இதுவரை 16,014 ஹெக்டேரும், மணிலா 13,453 ஹெக்டேரும், கரும்பு 8,398 ஹெக்டேரும் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. தற்போது இந்த வட்டத்தில் 6,800 ஹெக்டேர் நெற்பயிர், 4,203 ஹெக்டேர் மணிலா மற்றும் 3,598 ஹெக்டேர் கரும்பு அறுவடை செய்யப்படாமல் உள்ளது. இப்பயிர்களைக் காக்கும் பொருட்டு மணிமுத்தா நதியிலிருந்து 3-1-1996 முதல் விநாடிக்கு 168 கன அடி அளவில் சுழற்சி முறையில் தண்ணீர் திறந்து விடப்பட்டது. வடகிழக்குப் பருவமழை பொய்த்ததின் காரணமாக அணைக்கு போதிய நீர்வரத்து இல்லாததால் அணையிலிருந்து 22 நாட்கள் மட்டுமே தண்ணீர் திறந்து விட முடிந்தது. தற்சமயம் சிறுபாசன ஏரிகள் தண்ணீர் இன்றி வறண்டுள்ளன. பொதுப்பணித் துறை ஏரிகளிலும் தண்ணீர் இல்லை. வடகிழக்குப் பருவமழை பொய்த்ததின் காரணமாக நிலத்தடி நீர் வளமும் குறைந்து விட்டது.

மேலும் பின் சம்பா பருவத்தில் பயிரிடப்பட்ட நெல் பயிரும், கரும்பும், மானாவாரியாக பயிரிடப்பட்ட மணிலா பயிரில் சுமார் 2,150 ஹெக்டேர் பரப்பும் காய்ந்து வருகிறது. அரசு ஆணை எண். 26 வருவாய்த் துறை, நாள் 12-1-1996-ன்படி கள்ளக்குறிச்சி வட்டம் வறட்சி வட்டமாக அறிவிக்கப்பட்டுள்ளது. கள்ளக்குறிச்சி வட்டத்திலிருந்து பிரிந்து புதிதாக உருவாக்கப்பட்ட சங்கராபுரம் வட்டத்திலும் அதே வறட்சி நிலை நிலவுகிறது. எனவே, தற்போது சங்கராபுரம் வட்டத்தில் நிலவி வரும் வறட்சி காரணமாக இவ்வட்டத்தை வறட்சியால் பாதிக்கப்பட்ட வட்டமாக அறிவிக்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் பரிந்துரைத்துள்ளார்.

1996 மார்ச் 1] [திரு. எஸ்.டி. சோமசுந்தரம்]

முதன்மை ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் தமது அறிக்கையில் விழுப்புரம் இராமசாமி படையாட்சியார் மாவட்டத்தில் கள்ளக்குறிச்சி வட்டத்திலிருந்து பிரிந்து புதிதாக உருவாக்கப்பட்ட சங்கராபுரம் வட்டத்திலும் இதே வறட்சி நிலை நிலவுவதாலும் சங்கராபுரம் வட்டத்தில் கடந்த ஆண்டு 44 சதவிகிதத்திற்கும் குறைவாகவே மழை பெய்துள்ளது என்பதாலும் இவ்வட்டத்தையும் வறட்சியால் பாதிக்கப்பட்ட வட்டமாக அறிவிக்கலாம் என பரிந்துரை செய்துள்ளார். இச் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. சி. இராமசுவாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வறட்சிப் பகுதியாக அறிவிக்கப்படலாம் என்றும், பரிசீலனை செய்யலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. அதற்காக மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுக்கும் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியை வணக்கத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், மேற்படி அறிவிப்பு எப்போது அறிவிக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவ்வாண்டைப் பொறுத்தவரையிலும், தமிழகத்தைப் பொறுத்தவரையிலும், இயல்பாக எவ்வளவு மழை பெய்ய வேண்டுமோ அதைவிட குறைவாக பெய்து இருக்கிறது. எல்லா மாவட்டங்களிலும் பொதுவாக இன்றைக்கு வறட்சி ஏற்பட்டு இருக்கிறது. பல மாவட்டங்களில், இன்றைக்கு 9 மாவட்டங்கள் வறட்சி மாவட்டங்களாக அறிவிக்கப்பட்டு இருக்கிறது. ஆனால், சில மாவட்டங்கள் பூராவும் வறட்சி மாவட்டமாக இல்லாமல், ஒரு பகுதி அல்லது ஒரு வட்டம் வறட்சியாக இருக்கிறபோது அவை வட்டம் வட்டமாக அறிவிக்கப்படுகிறது. அப்படி வட்டம் வட்டமாக அறிவிக்கப்படுகிறபோது, இன்றைக்குக் கேட்கப்பட்டு இருக்கிற சங்கராபுரம் வட்டம் புதிதாக ஏற்பட்ட வட்டம் என்றாலும், இன்றைக்கு வடகிழக்குப் பருவ மழையை எதிர்பார்த்து நெல், கரும்பு, மணிலா முதலியவற்றைப் பயிர் செய்து இருக்கிறார்கள். அவைகள் எல்லாம் இன்றைக்கு ஓரளவுக்கு சாகுபடி ஆகியிருக்கிறது; கண்டுமுதல் ஆகியிருக்கிறது ; சில கண்டுமுதல் ஆகாமல் இருக்கிறது. இருந்தாலும் இவைகளை எல்லாம் மனதில் கொண்டு இந்த வட்டத்தையும் வறட்சி வட்டமாக அறிவிப்பதற்காக அரசு நடவடிக்கை எடுத்து இருக்கிறது.; விரைவில் வறட்சி வட்டமாக அறிவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

பிற்பகல் 12 -15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒவ்வொரு கேள்விதான், (குறுக்கீடு) இன்றைக்கு 4 கவன ஈர்ப்பு இருக்கிறது. அதிகமாக இருக்கும்போது ஒரு கேள்விதான்.

(ஆ) திருவல்லிக்கேணி தொகுதியில் அசுடிகான் பகதூர் தெருவில் சில நிலங்களைக் குடிசைப் பகுதியாக பிரகடனம் செய்தல் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு. திருமதி ஜீனத் சர்புதீன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி ஜீனத் சர்புதீன்.

திருமதி ஜீனத் சர்புதீன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"அசுடிகான் தெருவில் உள்ள நிலத்தில் ஏழை எளிய மக்கள் 40 வருடங்களுக்கும் மேலாக அதில் வசித்து வருகிறார்கள். இதை குடிசை மாற்று வாரியம் 1971 பிரிவு 3(1) கீழ் குடிசை பகுதியாக அரசு ஆணை எண் 1559 பிரகடனம் செய்யப்பட்டு உள்ளது. இந்த நிலையில் ஒருவர் விலைக்கு வாங்கியிருக்கிறார்". இது குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது:

அறிக்கை

சென்னையில் பல இடங்களில் தனியார்களுக்குச் சொந்தமான நிலங்களில் குடிசைப்பகுதிகள் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் அசுடிகான் பகதூர் தெரு குடிசைப்பகுதியும் ஒன்றாகும். அசுடிகான் பகதூர் தெரு குடிசைப்பகுதி சென்னை மாவட்டம் மயிலாப்பூர்-திருவல்லிக்கேணி வட்டம், திருவல்லிக்கேணி கிராமத்தில் கீழ்க்கண்ட தனியார் நிலங்களில் அமைந்துள்ளது.